**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.162/2025</u>**

**<u>நாள் : 27.02.2026</u>**

**ம.சா.** 1 திரு.சையது முகமது

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்தவர் எனது மகன் மத்தின் என்றால் சரிதான். எனது மகன் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் சுசுசி மேக்ஸ் வாகனமாகும். அதன் பதிவு எண் TN 29 V 8546. அந்த வாகனம் எனது மகனுக்கு சொந்தமானதாகும். எனது மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பதிவு செய்யப்படாத நிலையில் சாலையில் ஓட்டுவதற்கு தகுதியில்லாத வாகனம் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்துதான் போனார். எனது மகன் தலைக்கவசம் அணியாததால்தான் தலைக்காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகனுக்கு பின்னால் வந்த TN 52 J 3242 என்ற லாரி வருவதை கவனிக்காமல் திடீரென்று சாலையை குறுக்காக கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகனின் அஜாக்கிரதைதான் காரணம் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகன் தில்ஷாத் என்பவரை திருமணம் செய்திருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி தில்ஷாத்தை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மத்தீனின் வாரிசு சான்றிதழ் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. (அசல் ம.சா.ஆ.15 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது) மஸ்ஜித்தில் வழங்கப்பட்ட

வாரிசு சான்றிதழ் நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். எனது மற்றொரு மகன் பைரோஸ் அலி என்றால் சரிதான். எனது மகன் காய்கறி வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000/– சம்பாதித்ததை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எனது மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் எனது மகனின் வருமானத்தை முழுமையாக சார்ந்திருக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை</u>**

எனது மகன் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது அதன் பின்னால் ஒரு நபர் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு விபத்தில் காயம்பட்ட நிலையில் நஷ்டஈடு கோரி வாணியம்பாடி சார்பு நீதிமன்றததில் மனு தாக்கல் செய்து அந்த வழக்கில் 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

**மறுகுறுக்கு விசாரணை**

இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்ற நபர் பெயர் ஞாபகமில்லை. ஆனால் எனக்கு தெரிந்த நபர் ஆவார். வாணியம்பாடி வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.